Puducherry / Regional / Bulletin / Tamil /18.10Hrs / 26.6.2024 / Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 26.6.2024 - புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

மூத்த பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஓம் பிர்லா, மக்களவைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

அவரசநிலை பிறப்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இன்றைய இளைஞர்கள் அதைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம், உலகெங்கிலும் இன்று அனுசரிக்கப் படுகிறது.

தேசத்தின் ஆற்றலாகத் திகழும் இளைஞர்கள், போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

*ஓம் பிர்லா -1 (19)*

மூத்த பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஓம் பிர்லா, 18ஆவது மக்களவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். எதிர்கட்சிகள் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கே. சுரேஷ்-ஐ சபாநாயகர் பதவிக்கான

வேட்பாளராக நிறுத்தி இருந்த போதிலும், வாக்கெடுப்பிற்கு வலியுறுத்தவில்லை என்பதால், குரல் ஓட்டு மூலம் திரு. ஓம் பிர்லா தேர்ந்தெடுக்கப் பட்டார். இதைத் தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு ஆகியோர், திரு. ஓம் பிர்லாவை சபாநாயகர் இருக்கைக்கு அழைத்துச் சென்று அமர வைத்தனர். முன்னதாக இன்று காலை, அவை கூடியவுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடியும், தேசிய ஜனநாயக கூட்டணியின் வேறு 12 தலைவர்களும், திரு. ஓம் பிர்லாவை சபாநாயகர் பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கான தீர்மானத்தை அவையின் முன் மொழிந்தனர். எதிர்கட்சிகள் தரப்பில் இருந்து, UBT – சிவசேனாவைச் சேர்ந்த திரு. அரவிந்த் சாவந்த், சரத் பவார் – தேசியவாத காங்கிரசைச் சேர்ந்த திருமதி. சுப்ரியா சுலே உள்ளிட்டோர் திரு. சுரேஷிற்கு ஆதரவான தீர்மானத்தை முன் மொழிந்தனர். மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர், அவையில் திரு. ஓம் பிர்லா பேசுகையில், தம்மீது நம்பிக்கை வைத்து மீண்டும் இந்த வாய்ப்பை தமக்கு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

*ஓம் பிர்லா -2 (20)*

நாடாளுமன்ற மாண்புகளையும், ஜனநாயக மரபுகளையும் பேணிக் காப்பதே தமது முன்னுரிமைப் பணியாக இருக்கும் என்று அவர் தெரிவித்தார். 64 கோடி வாக்காளர்கள் தேர்தலில் உற்சாகமாக பங்களித்து

உருவாக்கி உள்ள 18ஆவது நாடாளுமன்றம், உலகின் மிகப்பெரிய ஜனநாயக கொண்டாட்டம் என்று திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டார். கடந்த 10 ஆண்டுகளில், நாட்டு மக்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் நம்பிக்கைகள் பெரிய அளவில் மாறியிருப்பதால், மக்களின் எண்ணங்களை திறன்பட்ட முறையில் நிறைவேற்றும் பொறுப்பை எம்.பிக்கள் தங்களின் கூட்டுப் பொறுப்பாக ஏற்க வேண்டும் என அவர் கூறினார். நாடாளுமன்றத்தில், தேக்க நிலைக்குப் பதிலாக, விவாதங்களின் பாதையை அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்றும் எதிர்ப்புகள் இருந்தால், அவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் அதை பதிவு செய்ய வேண்டும் என்றும் சபாநாயகர் வலியுறுத்தினார். அவையின் கண்ணியத்தை காக்கவே, சபாநாயகர் கடும் நடவடிக்கை எடுக்க நேர்வதாக, அவர் மேலும் குறிப்பிட்டார். முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, திரு. ஓம் பிர்லாவை வாழ்த்தி அவையில் பேசுகையில், சபாநாயகர் பதவிக்கு 2ஆம் முறையாக திரு. ஓம் பிர்லா தேர்ந்தெடுக்கப் பட்டதன் மூலம், வரலாறு படைக்கப் படுவதாகக் கூறினார். அடுத்த 5 ஆண்டுகளுக்கு திரு. ஓம் பிர்லாவின் வழிகாட்டுதலைப் பின்பற்றி நடக்க, அவை காத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

*ஓம் பிர்லா -3 (15)*

அவையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொள்ளும் விதம்தான், ஜனநாயகம் மீதான மக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தும் என்றும், ஒரு நாடாளுமன்றவாதியாக திரு. ஓம் பிர்லாவின் செயல்பாடுகள், மற்ற உறுப்பினர்களுக்கு உணர்வூக்கமாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முந்தைய மக்களவை, திரு. ஓம் பிர்லாவின் தலைமையில் பல முக்கிய மசோதாக்களை நிறைவேற்றியதை, பிரதமர் திரு. நரேந்திர மோடி சுட்டிக் காட்டினார். முந்தைய மக்களவையில், சாதனை அளவாக 97 சதவிகித செயல்திறன் எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி திரு. ஓம் பிர்லாவை பாராட்டிப் பேசுகையில், மக்கள் குரலின் பிரதிபலிப்பே நாடாளுமன்றம் என்றும், அவையின் அலுவல்கள் சுமூகமான முறையில் நடைபெற எதிர்கட்சிகள் ஆதரவளிக்கும் என்றும் கூறினார். ஒத்துழைப்பு, நம்பிக்கை சார்ந்தது என்றும், அவையின் எதிர்கட்சிகளின் குரலை அனுமதித்தல் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அரசுக்கு அரசியல் அதிகாரம் இருக்கலாம் என்றாலும், மக்கள் குரலை பிரதிபலிப்பதில் எதிர்கட்சிகளுக்கும் பங்கு உண்டு என்று அவர் குறிப்பிட்டார்.

சமாஜ்வாதி கட்சியின் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுதீப் பந்தோபாத்யாய், ராம்விலாஸ் லோக் ஜனசக்தி கட்சியின் தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. சிராக் பாஸ்வான், அப்னா தள் தலைவரும் மத்திய அமைச்சருமான திருமதி. அனுப்ரியா படேல் உட்பட பல்வேறு உறுப்பினர்களும் அவையில் திரு. ஓம் பிர்லாவை வாழ்த்திப் பேசினர்.

EP/RSS/MS/RK

*மோடி சந்திப்பு (3)*

ஹரியானா மாநில ஆளுநர் திரு. பண்டாரு தத்தாத்ரேயா, இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார். பஞ்சாப் ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோஹித்-தும் பிரதமரை சந்தித்தார்.

EP/RSS/MS/RK

*மோடி எமர்ஜென்சி (11)*

அவரசநிலை பிறப்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இன்றைய இளைஞர்கள் அதைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். அரசியல் சாசனத்தை நசுக்கி, மக்கள் கருத்தின் குரல் வளையை நெறித்து, அமைப்புகளை அழித்தால், என்னவாகும் என்பதற்கு சரியான எடுத்துக்காட்டே அவசரநிலை என்றும், அவசரநிலையின் போது நிகழ்ந்த

சம்பவங்கள், சர்வாதிகாரத்திற்கு உதாரணம் என்றும், சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா இன்று, அவசர நிலையை வலுவாக கண்டித்து, அவசரநிலையின் போது, ஜனநாயகம் ஒடுக்கப்பட்ட விதம் பற்றி பேசியது குறித்து, தாம் மகிழ்ச்சி அடைவதாக திரு. நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

EP/RSS/MS/RK

*ஆர்ப்பாட்டம் (8)*

1975ஆம் ஆண்டு அவசர நிலை பிரகடனத்தை கண்டித்து, ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி எம்.பிக்கள் இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே, ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். அவசரநிலை அறிவிக்கப் பட்டதற்கு நாட்டு மக்களிடம் காங்கிரஸ் மன்னிப்பு கேட்க வேண்டும் என இவர்கள் கோ ா ினர். அரசியல் சாசனத்தை பலவீனப்படுத்தும் இத்தகைய சம்பவங்கள் இனி ஒருபோதும் நிகழாது என நாடாளுமன்றத்தில் தாங்கள் தீர்மானம் நிறைவேற்றி இருப்பதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

EP/RSS/MS/RK

*போதை உலகம் (13)*

போதைப் பொருட்களின் தீமைகளுக்கு தெளிவான ஆதாரங்கள் இருப்பதால், தடுப்புப் பணிகளில் முயற்சிகளை முதலீடு செய்வோம் என்ற

கருப்பொருள் அடிப்படையில், சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம், உலகெங்கிலும் இன்று அனுசரிக்கப் படுகிறது. இந்தியாவில், போதைப் பொருட்களின் தேவையை குறைப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை, மத்திய சமூக நீதி அமைச்சகம் அமல்படுத்தி வருகிறது. மக்களைத் தேடிச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் போதைப் பொருள் இல்லாத இந்தியா ஒன்றை உருவாக்கும் இயக்கத்தையும் அமைச்சகம் தொடக்கி உள்ளது. போதைப் பழகத்திற்கு ஆளானவர்களை அதிலிருந்து மீட்பதற்கான ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையங்கள், அமைச்சகத்தின் ஆதரவுடன், நாடு முழுவதும் 342 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. தேவை உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்க 14 44 6 என்னும் இலவச தொலைப் பேசி எண்ணையும் அரசு செயல்படுத்தி வருகிறது.

EP/RSS/MS/RK

*போதை - ரங்கசாமி (13)*

தேசத்தின் ஆற்றலாகத் திகழும் இளைஞர்கள், போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினத்தில், அனைவரும் இதற்கு உறுதி ஏற்க வேண்டும் என, போதைப் பொருள் ஒழிப்பு தின செய்தியில்

அவர் கூறியுள்ளார். புதுச்சேரி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான உறுதி மொழியை, தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், ஆங்கிலத்திலும், அரசுச் செயலர் திரு. ஆர். கேசவன் தமிழிலும் வாசிக்க, தலைமைச் செயலக அதிகாரிகள், ஊழியர்கள் அனைவரும் உறுதி மொழி ஏற்றுக் கொண்டனர்.

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை ஒட்டி புதுச்சேரியில் உள்ள தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் மத்திய மக்கள் தொடர்பகத்தில், துணை இயக்குநர் முனைவர் டி.சிவகுமார் தலைமையில் ஊழியர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

DD/RSS/MS/RK

*போதை ஒழிப்பு (12)*

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினமான இன்று, புதுச்சேரி கடற்கரை சாலையில், காவல்துறையினர் போதைப் பொருள் ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். காவல்துறை IG திரு. அஜித் குமார் சிங்லா தலைமையில் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கடற்கரை சாலையில், காவல்துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள பேனரில் கையெழுத்து இயக்கமும் தொடக்கப்பட்டது. அங்கு நிறுவப்பட்டுள்ள போதை எதிர்ப்பு உறுதிமொழி செல்ஃபி பாயின்ட்டில் காவல்துறை அதிகாரிகள் செல்ஃபி எடுத்துக் கொண்டனர். தொடர்ந்து கடற்கரைச் சாலை காந்தி திடல் பின்புறம் தூய்மைப்

பணியிலும், காவல்துறையினர் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர்கள் திரு. நாரா சைதன்யா, திரு. கலைவாணன், கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் போலீசார் கலந்து கொண்டனர்.

DD/RSS/MS/RK

*கோகுல் திட்டம் (13)*

மத்திய அரசின் ராஷ்ட்ரிய கோகுல் இயக்கத்தின் கீழ், கறவை மாடுகளுக்கு சிறப்பு சினை பிடிக்கும் முகாம், கரிக்கலாம் பாக்கம் கால்நடை மருந்தகத்தில் இன்று நடைபெற்றது. புதுச்சேரி அரசின் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் டாக்டர் குமரவேல் இதற்கு தலைமையேற்று, கால்நடைகளின் மலட்டுத் தன்மைக்கு சிகிச்சை அளித்து செயற்கை முறையில் கருவூட்டல் செய்தார். கரிக்கலாம் பாக்கம், கோர்க்காடு, ஏம்பலம் மற்றும் நத்தமேடு பகுதிகளைச் சேர்ந்த கால்நடை விவசாயிகள் மற்றும் மத்திய அரசின் ஆத்மா திட்ட கால்நடைக் குழு உறுப்பினர்கள், தங்களின் கறவை மாடுகளுடன் இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட கறவை மாடுகளுக்கு இம்முகாமில், மலட்டுத் தன்மைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. தாது உப்புக் கலவையும் இலவசமாக வழங்கப்பட்டது. ஆத்மா திட்ட கால்நடை மருத்துவர் டாக்டர் செல்வமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

DD/RSS/MS/RK

*பிரல்ஹாத் ஜோஷி (15)*

மக்களவைத் தலைவர் பதவிக்கு வேட்பாளரை நிறுத்தியதற்காக, காங்கிரஸ் கட்சியை, மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி விமர்சித்துள்ளார். இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், துணை சபாநாயகர் பதவி குறித்து விவாதிக்க அரசு தயாராகவே இருந்தபோதிலும், எதிர்கட்சிகள் அதை முன் நிபந்தனையாக விதித்தது, சரியானது அல்ல என்றார். சபாநாயகர் பதவியை அரசியலாக்க எதிர்கட்சிகள் முயலுவதாக, மற்றொரு மத்திய அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் கூறினார். இதற்கிடையே, சபாநாயகர் பதவி குறித்து அரசுக்கும், எதிர்கட்சிகளுக்கும் இடையே எந்த விவாதமும் நடக்கவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார். தேர்தல் வந்ததன் காரணமாகவே, தாங்கள் வேட்புமனு தாக்கல் செய்ததாக அவர் குறிப்பிட்டார். 2024ஆம் ஆண்டு தேர்தலுக்கு முந்தைய நாடாளுமன்றமும், அதற்கு பிந்தைய நாடாளுமன்றமும், முற்றிலும் வெவ்வேறானவை என்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்று மற்றொரு மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. கவுரவ் கோகோய் கூறினார்.

EP/RSS/MS/RK

*ரிஜிஜு (7)*

மக்களவைத் தலைவர் பதவிக்கான தேர்தலின்போது வாக்கெடுப்புக் கோரிக்கைகளை, தற்காலிக சபாநாயகர் ஏற்கவில்லை என்று திரிணாமுல் காங்கிரஸ் வெளியிட்டுள்ள குற்றச்சாட்டை நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு மறுத்துள்ளார். இன்று நாடாளுமன்றத்திற்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்கெடுப்பு நடத்தவே அரசு விரும்பிய போதிலும், குரல் ஓட்டின்போது, வாக்கெடுப்புக் குறித்து முறையான கோரிக்கை எதையும் எதிர்கட்சிகள் விடுக்கவில்லை என்றார்.

EP/RSS/MS/RK

*மகாராஷ்டிரா நீட் (4)*

நீட் தேர்வு முறைகேடுகள் தொடர்பாக மத்திய புலனாய்வு குழு ஒன்று, மத்தியபிரதேஷ் மாநிலம், பீட் நகருக்குச் சென்றுள்ளது. பீட் மாவட்டம் மாலகாம் பகுதியைச் சேர்ந்த சில ஆசிரியர்களை மத்திய புலனாய்வு குழுவினர் விசாரித்து இருப்பதாகவும், மாநில காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

EP/RSS/MS/RK

*அமித் □ ா வாழ்த்து (7)*

மக்களவைத் தலைவர் பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ஓம் பிர்லா-விற்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா

வாழ்த்துத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற ஜனநாயகத்தை வலுப்படுத்தும் மன உறுதியில் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் திரு. ஓம் பிர்லா என்றும், அரசியல் சாசனம், மற்றும், அரசியல் சாசன உணர்வுகளின் மகிமைகளை அவர் மேலும் வலுப்படுத்துவார் என்றும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

EP/RSS/MS/RK

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

மூத்த பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஓம் பிர்லா, மக்களவைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

அவரசநிலை பிறப்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் ஆகிவிட்ட போதிலும், இன்றைய இளைஞர்கள் அதைப் பற்றி அறிந்து கொள்ளுதல் அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம், உலகெங்கிலும் இன்று அனுசரிக்கப் படுகிறது.

தேசத்தின் ஆற்றலாகத் திகழும் இளைஞர்கள், போதைப் பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / MS / RK